**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ICTA)**

# விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

# இலங்கை அரச கிளவுட் (மேகக் கணிமை) (LGC 2.0) தொகுதிக்கான வலையமைப்பு பாதுகாப்பு மதிப்பீட்டு கருவி மற்றும் இணையதள பயன்பாட்டு கருவி நிறுவல் கட்டமைப்புக்கான பெறுகை

**ICTA/GOSL/GOODS/NCB/2022/02**

1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் (ICTA) இலங்கை அரசாங்க கிளவுட் (மேகக் கணிமை) அரசாங்கத்திற்கு முழுமையாக சொந்தமான பிரதான உட்கட்டமைப்பாக ஸ்தாபிக்கப்பட்டது. 800 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட இணைய பயன்பாடுகளை வழங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரப்பதற்காக பாதுகாப்பு சோதனை கருவிகளை நிறுவதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது. பாதுகாப்பு மதிப்பீட்டு கருவி மற்றும் இணையதள பயன்பாட்டு கருவி நிறுவல் கட்டமைப்புபை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.
2. இலங்கை அரச கிளவுட் (மேகக் கணிமை) (LGC 2.0) தொகுதிக்கான வலையமைப்பு பாதுகாப்பு மதிப்பீட்டு கருவி மற்றும் இணையதள பயன்பாட்டு கருவி நிறுவல் கட்டமைப்புக்கான பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ICTA சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.
3. அனைத்து விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பயன்படுத்தி வங்கி உத்தரவாதத்தின் வடிவத்தில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா (ரூபா 120,000.00) பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைக்கோரல்கள் இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படும் தேசிய போட்டி விலைக்கோரல் (NCB) நடைமுறையைப் பயன்படுத்தி நடாத்தப்படும் என்பதுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள தகுதி மற்றும் தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அனைத்து தகுதியான விலைமனுதாரர்களும் விலைக்கோரல் திறக்கப்பட்டிருக்கும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-03. இல. 490, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, 6 ஆம் மாடி, ICTA பெறுகைப் பிரிவில் 2022 மார்ச் 14ஆம் திகதி முதல் வேலை நாட்களில் கடமை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். தொலைபேசி: 2369099, மின்னஞ்சல்: procurement@icta.lk விலைமனு ஆவணங்கள் பார்வையிடுவதற்காக மட்டும் (https://www.icta.lk/procurement/) ICTA இணையதளத்தில் கிடைக்கின்றன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 மார்ச் 14ஆம் திகதி முதல் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஐந்தாம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரிக்கு மீளளிக்கப்படாத மூவாயிரம் ரூபா 3,000.00 ரூபா கட்டணத்தை செலுத்தியும் மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனுக்கள் ஐந்தாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2022 மார்ச் 28ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும். சமுகம் தந்துள்ள விலைக்கோரல் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்தின் பின் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் 3 ஆம் பந்தியல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பயன்படுத்தி வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுதாரர்களுக்கும் தங்கள் விளக்கத்தை விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் 5 நாட்களுக்கு முன் Procurement@icta.lk எனும் மின்னஞ்சல் ஊடாக அனுப்புமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு.**
**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ICTA),**
**இல. 490, 6 வது தளம், ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை,**
**கொழும்பு-01.**
**மார்ச் 13, 2022**